★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 ஆனி 29 ஷவ்வா 2 இதழ் 152

யாழ்ப்பாணம் புதன்கிழமை 13—7—83

## மட்டக்களப்பில் வன்செயல்கள்
## பஸ்சேவை 6 மணியுடன் ரத்து!

[மட்டக்களப்பு நிருபர் இரா. துரைரத்தினம்]

மட்டக்களப்புப் பகுதியில் நிகழ்ந்துள்ள சில சம்பவங்களைத் தொடர்ந்து பஸ்சேவைகள் இரவு ஆறுமணியுடன் ரத்துச்செய்யப்பட்டுள்ளன. அத்தோடு இரண்டாம் படக்காட்சிகளும் ரத்தாகியுள்ளன.

நேற்றுமுன்தினம் இரவு 8-30மணிக்கும் 10 மணிக்குமிடையில் மட்டக்களப்பில் சின்னஊரணி, புதூர், மஞ்சந்தொடுதால் ஆகிய இடங்களில் தீவைப்புச் சம்பவங்கள் இடம் பெற்றன.

வலைஇறவிலிருந்து மட்டக்களப்பு நோக்கி வந்த மட்டக்களப்பு டிப்போவுக்குச் சொந்தமான பஸ்வண்டி ஒன்று இரவு 8.45மணியளவில் புதூர் சுமைதாங்கி என்னுமிடத்தில், சில இனந்தெரியாத இளைஞர்களால், வழிமறிக்கப்பட்டு சாரதியையும், நடத்துநரையும் ஆயுதங்களால் தாக்கிவிட்டு. பஸ்ஸுக்குத்தீயிட்டுக்கொளுத்தினராம்.

சாரதி, நடத்துநர் உட்பட நான்கு பிரயாணிகள் மட்டுமே இந்த பஸ்ஸில் பிரயாணம் செய்தனர்.

### முகமூடி இளைஞர்கள்

முகமூடி அணிந்த பத்து இளைஞர்கள் தீவைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது.

சாரதியும் நடத்துநரும் மட்டக்களப்பு வைத்தியசாலையில்

(6-ம் பக்கம் பார்க்க)

# வடக்கில் இராணுவச் சட்டம்
# விரைவில் அமுலாகலாம்!

## ஜனாதிபதி கூட்டும் மாநாட்டில் கூட்டணிக்கு அழைப்பு இல்லை

### லண்டன் பத்திரிகைக்கு ஜனாதிபதி பேட்டி

(கொழும்பு)

வடபகுதியில் இராணுவச்சட்டம் விரைவில் அமுல் செய்யப்படும் என்ற கருத்துப்பட ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன லண்டன் 'டெய்லி ரெலி கிராப்' பத்திரிகை நிருபரின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் சூசகமாக தெரிவித்தார்.

'டெய்லி ரெலிகிராப், பத்திரிகையின் 11-ம்தேதி இதழில் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன தெரிவித்திருப்பதாவது:

''சுதந்திர தமிழ்ஈழம் கோரும் பயங்கரவாதிகளை ஒழிக்க கடுமையான புதிய நடவடிக்கைகளை எடுக்கவுள்ளேன். தமிழ்ப்பயங்கரவாதிகளின் கருத்துக்களை அறிந்து கொள்ளும் எண்ணம் இனிமேல் இல்லை. அதுபற்றிய அக்கறையும் அரசுக்குகிடையாது.

''பயங்கரவாதிகளை ஒழிப்பது சம்பந்தமாக சில ஸ்திரமான நடவடிக்கைகளை எடுத்திருந்தேன் ஒன்றுமே பயனளிக்கவில்லை. பயங்கரவாதத்தை வடபகுதியிலிருந்து ஒழிப்பது சம்பந்தமாக யாழ்ப்பாண மக்களின் அபிப்பிராயம் பற்றியோ கருத்துக்கள் பற்றியோ கவலைப்படமுடியாது.

''வடபகுதி மக்களின் ஆதரவு பெற கடந்த காலத்தில் பல கொள்கைகளைக் கடைப்பிடித்து வந்தேன் இனிமேல் இதுபற்றி சிந்திக்க முடியாது.

''வடபகுதிமக்களின் வாழ்க்கைபற்றியோ எம்மைப் பற்றி அவர்கள் என்ன நினைக்

(6-ம் பக்கம் பார்க்க)

### பொலிஸ் மா அதிபர் வேண்டுகோள்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்படுவதை தடுக்க உதவுமாறு பொலிஸ் மாஅதிபர் திரு. ருத்ரா ராஜசிங்கம் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## அரசு நடவடிக்கை பற்றி ஜனாதிபதி விளக்குவார்

(கொழும்பு)

இன்று நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தைத் தொடர்ந்து ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன, நாட்டு மக்களுக்கு வானொலியிலும், தொலைக்காட்சியிலும் உரையாற்றுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதியின் உரை குறிப்பாக, வடபகுதியில் பயங்கரவாதம் தொடர்பாக அரசாங்கம் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள் பற்றி விளக்கமாகக்கொண்டிருக்கும் என்று அறியப்படுகிறது.

## மன்னார் ஆஸ்பத்திரியில் ,ஜீப்பு'க்கு தீவைப்பு!

(மன்னார்)

மலேரியா தடுப்பு இயக்கத்தின் மன்னார்கிளைக்குச் சொந்தமான இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான ஜீப் ஒன்றிற்கு நேற்றுமுன்தினமிரவு சுமார் 10-30 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் தீவைக்கப்பட்டது.

இந்த ஜீப்பின் பெரும்பகுதி எரிந்துவிட்டது. மன்னார் அரசினர் ஆஸ்பத்திரி பார்வையாளர் தங்குமிடத்திற்கு அருகாமையிலுள்ள கட்டிட சுவர் ஓரத்தில் இந்த ஜீப் நிறுத்தி

(6-ம் பக்கம் பார்க்க)

## தேசிய சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

நேற்று இழுக்கப்பட்ட 938 வது தேசிய லொத்தர் சுவீப்பின் முதல் மூன்று முடிவுகள் வருமாறு:

முதலாம் பரிசு
05 W 0095

இரண்டாம் பரிசு
08 E 0388

மூன்றும் பரிசு
02 Z 0999

கூட்டணி மாநிலமாநாடு

## பிரசார செயலாளர் ஜெயராஜ் கைது!

(மன்னார்)

மன்னார் கூட்டணி மாநாட்டுப் பிரசாரக் குழுச்செயலாளர் திரு. ஜெயராஜ் நேற்று முன்தினம் இரவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இவருடன் சென்ற மற்றொரு இளைஞரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

மன்னார் செம்மந்தீவை சேர்ந்தவரும், கூட்டணி

(6-ம் பக்கம் பார்க்க)


## குவைத்தில் வேலைவாய்ப்பு

குவைத்தில் உள்ள உணவு விநியோக கம்பெனி ஒன்றில் (CATERING COMPANY) பல்வேறுதுறைகளிலும் கடமையாற்ற, உடனடியாக ஆட்கள் தேவை. வேலைகோரி விண்ணப்பிப்போர் தங்களது விண்ணப்பத்துடன் (இரண்டு பிரதிகள்), கல்வித்தகைமை மற்றும் அனுபவச் சான்றிதழ்களுடன், பாஸ்போர்ட் 'போட்டோ ஸ்ரட்' பிரதியும், அண்மையில் எடுக்கப்பட்ட இரண்டு புகைப்படங்களுடன், உடன் விண்ணப்பிக்கவேண்டும்.

வேலைவாய்ப்பும், வேலையாட்கள் தொகை விபரமும்:

(1) அதிபார வாகனச் சாரதிகள் - 10
(2) இலகு வாகனச் சாரதிகள் - 30
(3) பிளம்பர்ஸ் - 15
(4) கூலியாட்கள் - 80
(5) பிரதம சமையற்காரர்கள் - 20
(6) உதவிச் சமையற்காரர்கள் - 10
(7) மாவினால் தயாரிக்கப்படும் உணவுவகை சமையற்காரர்கள் - 02
(8) மாவினால் தயாரிக்கப்படும் உணவுவகை உதவியாளர்கள் - 02
(9) கசாப்புக்காரர்கள் - 02
(10) உதவி கசாப்புக்காரர்கள் - 02
(11) விநியோக உதவியாளர்கள் - 200

உங்கள் விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:

INTER TRADE AGENCIES
23, ALOE AVENUE,
COLOMBO-3

தொழிற்பதிவு இல: 199
தொழில் அங்கீகாரம்: FE/6/FEA/181 4119
(7958)


## ரயில்சேவை இடைநிறுத்தம்: வடபகுதி பெரும் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

மண்ணெண்ணெ, டீசல், பெற்ரோல் போன்ற எரி பொருள்களுக்கு வடபகுதியில் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எரிபொருள் நிலையங்களுக்கு முன்பாக தினசரி வாகனங்களும், பாவனையாளர்களும் நீண்ட 'கியூ'வில் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையே நடைபெற்றுவந்த ரயில்சேவை இடை நிறுத்தப்பட்டுள்ளதால் இத்தட்டுப்பாடு நிலவுகிறது.

நிலைமை எப்படி இருந்த போதிலும் பாதுகாப்புடன் பத்து நாட்களுக்குள் இரு தடவை எண்ணெய் ரயில் யாழ்ப்பாணம் வந்ததென்றும் இந்த எண்ணெய் ரயிலும் குறிப்பிட்ட சில ராங்கிகளுடன்தான் வந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். அரசாங்க அதிபர் யாழ்ப்பாணத்திலுள்ள பெற்ரோலியம் கூட்டுத்தாபன அதிகாரிகளுடன் நடத்திய ஆலோசனையின்பேரில் பங்கீட்டுஅடிப்

(6-ம் பக்கம் பார்க்க)

# விளம்பரம்

## விற்பனைக்கு

குடியிருக்க வசதியானதும், பாடசாலை, மின் வசதியுள்ளதுமான 8 பரப்புக் காணி மட்டுவில் தெற்கில் நுணுவில் பருத்தித்துறை செல்லும் வீதிக்கு அண்மையில் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு:- செ. குமாரசாமி (இளைப்பாறிய பொலிஸ்), மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. 7929

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் நல்ல நிலையிலுள்ள பழைய கட்டுத்தேர் விற்பனைக்குண்டு. விரும்புவோர் நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும். நிர்வாகசபை. 7946

Volkswagen, 1200, 12 V 9 ஸ்ரீ கார், ஒறிஜினல் நிலையில் (குறைந்த மைல் ஓடியது) விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். போன்: 23252. (7955)

## தேவை

யாழ்ப்பாணம் ஸ்ரீரூயல் டிஸ்பென்சறிக்கு நல்ல ஆங்கில கணித அறிவுள்ள பெண் உதவியாளர் உடன் தேவை. நேரில்வரவும். 7940

கிளிநொச்சி, பிரதான வீதியிலுள்ள ''சிவாஸ் இன்டஸ்ரீஸ்'' தையல் நிலையத்துக்கு தையல் கட்டிங்கில், நல்ல திறமையும், அனுபவமுமுள்ள பெண் தேவை. நேரில் தொடர்பு கொள்பவர்கள் கிளிநொச்சி, கண்டிவீதி, ''சிவாஸ் கபே''க்கு வரவும். 7941

சிங்கப்பூரில் வசிக்கும் தமிழ்க் குடும்பத்திற்கு ஆங்கிலம் பேச எழுதத்தெரிந்த பணிப்பெண் தேவை. நேரில் சிங்கன் என்பவரை 09-07-83 லிருந்து 13-07-83 வரையில் திருமதி பூமாதேவி நடராஜா, டச்சுறோட், தொல்புரம் என்ற முகவரியில் வந்து பார்க்கவும். 7922

கைத்தறி நெசவு வாப்பு ஓட தெரிந்த பெண் பிள்ளை ஒருவர் தேவை. முன் அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும். சிவராம் ரெக்ஸ் புடவைகடை, புதுறோட் சந்தி, காரைநகர். 7945

எமது வைத்தியசாலைக்கு வைத்திய உதவியாள் தேவை. வைத்திய அனுபவம். இருப்பின் நன்று. உடன் விண்ணப்பிக்கவும். டாக்டர் வி. வேதநாதன் J.P, மக்கள் வைத்தியசாலை, யோகபுரம். 7947

## தவறிவிட்டது

11-7-83 பகல் 1—2 மணிக்கிடையில் சித்தன்கேணி சீரணி பிரதான வீதியில் அடையாள அட்டை, றைவிங் லைசென்ஸ், இன்சூரன்ஸ், மற்றும் சிறிது பணத்துடன் துணிப்பை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவு செய்து ஒப்படைக்கவும். அல்லது தகவல் தரவும். சன்மானம் வழங்கப்படும். க. கனகரெட்ணம், 64, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம். போன்: 22518. (7954)

## கல்வி

மோட்டார் மெக்கானிசம் (வயின்டிங், மோட்டார் எலெற்றோனிக்ஸ் இலவசமாக கற்பிக்கப்படும்.) கிழமை நாட்களில் காலை வகுப்புக்கள். உடன் தொடர்பு கொள்க. நிர்வாகி, யாழ்ப்பாண கல்வி நிலையம், சாந்தி தியேட்டர் அருகாமை, யாழ்ப்பாணம். விரிவுரையாளர் S. C. இம்மானுவேல் B.Sc. (Cey) Electrical and Automobile Engineer. 7949

City and Guilds inter-final Electrical Power Engineering only ஆரம்பம் 16-7-83. உடன் தொடர்பு கொள்க. நிர்வாகி, யாழ்ப்பாண கல்வி நிலையம், சாந்தி தியேட்டர் அருகாமை, யாழ்ப்பாணம். 7950

## விற்பனைக்கு

12—15 அடி உயர புதிய குரோமியம் முலாம் பூசப்பட்ட கொடிஸ்தம்பம் 12—35—45 கிலோ எடையுள்ள ஆலய மணிகள் விற்பனைக்கு உண்டு.

பூரண விளைத்திறனுடைய பூஞசிகப்பு ரக பம்பாய் வெங்காய விதைகள் விற்பனைக்கு உண்டு.

**பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்**

251, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(7860)

## வெள்ளி விழா

(யாழ்ப்பாணம்)

அப்போஸ்தலிக்க கார்மேல் சபையைச் சேர்ந்த அருட்செல்வி சிசிலியா மேரி இன்று தமது வெள்ளி விழாவைக் கொண்டாடுகின்றார்.

புனித மரியாள் பேராலயத்தில் இன்று மாலை 4-30 மணிக்கு நன்றிப் பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

## கொடித்தம்பம் நாட்டும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் பெருமாள் ஆலயத்தில் கொடித்தம்பம் நாட்டும் வைபவம், இன்று புதன் கிழமை நண்பகல் விசேடஅபிஷேக ஆராதனைகளுடன் நடைபெறவுள்ளது.

இக்கொடித்தம்பம் சுமார் 20 ஆயிரம் ரூபா செலவில் வெள்ளியினால் அமைக்கப்பட்டுள்ளது. இன்று மாலை கூட்டுப்பிரார்த்தனை நடைபெறும். இம்மாதம் 15-ம் திகதி ஆலயத்தில் உருவாகிவரும் தேருக்கு அச்சாணிபோடும் வைபவமும் நடைபெறவுள்ளது.

## இலட்சார்ச்சனை

(கொக்குவில்)

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை முதல் தொடர்ந்து பதினொரு தினங்கள் மாலை நான்கு மணிக்கு இலட்சார்ச்சனை நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

## இராஜகோபுர அடிக்கல் நாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பிரசித்தி வாய்ந்த உரும்பராய் கருணாகரப்பிள்ளையார் கோயிலில் அமையவுள்ள இராஜகோபுரத்தின் அடிக்கல் நாட்டு விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை நிகழவுள்ளது.

பஞ்சதளங்களையும் நாற்பத்தொரு அடி உயரத்தையும் கொண்டு கருணாகரனின் சரித்திர வரலாறுகளைப் பிரதிபலிக்கும் வகையில் அமையவுள்ள இக்கோபுரம் பத்து லட்சம் ரூபா செலவில் நிறுவப்படவுள்ளது.

## இன்று பரிசில்கள் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

புதிய சோனகதெரு முன்னேற்றச் சங்கத்தால் நடாத்தப்பட்ட றமழான் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு இன்று புதன்கிழமை மாலை ஜின்னா மைதானத்தில் பரிசில்கள் வழங்கப்படவுள்ளது.

ஜனாப் என். எம். சுல்தான் விளையாட்டு வீரர்களுக்கான பரிசில்களை வழங்கவுள்ளார். (மா)


**நாளை மகத்தான திறப்புவிழா**

திருநெல்வேலி புதியசந்தை மேல்மாடி 14-ம் இலக்கத்தில் அமைந்துள்ள

**உமா ரூர்ஸ் அன் ட்ரவல்ஸ்**

14-7-1983 வியாழக்கிழமை காலை 9-43 மணிக்கு பிரபல கட்டிட ஒப்பந்தகாரர்

**திரு. எஸ். தம்பிஐயா**

அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

உரிமையாளர்.

(7889)


**நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் திருக்குடமுழுக்கு (மகாகும்பாபிஷேகம்) பற்றிய**

## அறிவித்தல்

கோவிலின் நித்திய பூசகர்கள் அறங்காவலர் சபைக்கு எதிராகத் தாக்கல் செய்துள்ள வழக்குக் காரணமாக **14-7-1983 - ல் நடைபெறவிருந்த மேற்படி கும்பாபிஷேகம் 28-8-1983 ஞாயிற்றுக் கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.**

குறிப்பு: கும்பாபிஷேகம் தொடர்பான யந்திர பூஜைகள் 11-7-83 திங்கட்கிழமை மாலை 5-00 மணிக்கு ஆரம்பமாகும். கர்மாரம்பம் 19-8-83 வெள்ளிக்கிழமையும், யாகாரம்பம் 24-8-83 புதன்கிழமையும், பிம்பஸ்தாபனம் 26-8-83 வெள்ளிக்கிழமையும் நடைபெறும். மகாகும்பாபிஷேகம் 28-8-83 காலை 6-05 தொடக்கம் 7-15 வரையான சுபமுகூர்த்தத்தத்தில் நடைபெறும்.

அறங்காவலர் சபை

7936

## திருமண வைபவ நன்றி நவிலல்

01-07-1983 அன்று நடைபெற்ற திருமண வைபவத்தில் எமது அழைப்பை ஏற்று கலந்து சிறப்பித்த உங்கள் அனைவருக்கும் இதயம் கலந்த நன்றியை உவகையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**எஸ். இராசரத்தினம் தம்பதிகள்**

''இராஜன் மில்ஸ்''

புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம்.

12-07-83. (7953)


**யாழ்நகர் மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தி**

வெளிநாடுகளுக்கு செல்வதற்கான விமானச்சீட்டுகள், யாழ்நகரிலே பதிவுசெய்வதற்கு நம்பிக்கையான விமான சீட்டுகள் வழங்கும் ஒரே முகவர் நிலையம்.

**குறொஸ் ட்ரவல் சேவிசஸ் [பிறை] லிமிட்.**

**05, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.**

ஹொலன்ட் (HOLLAND) வழியாக இத்தாலி (ITALY) பிரான்ஸ் (FRANCE) ஆகிய நாடுகளுக்கான பிரயாணச் சீட்டுகள் மற்றும் ஜேர்மனி (GERMANY), கனடா (CANADA), சிங்கப்பூர் (SINGAPORE) ஹொலன்ட் (HOLLAND) போன்ற நாடுகளுக்கான குறைந்த கட்டண பிரயாணசீட்டுகள், பிரயாணிகள் காசோலை, விசா (VISA)

கனடா, அமெரிக்கா செல்வதற்கு தேவையான ஒழுங்குகள் மற்றும் பிரயாண ஒழுங்குகள் எதுவானாலும் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்...

**CROSS TRAVEL SERVICES (PVT)LTD.**

Approved Passenger Sales agent in Sri LanKa M/s swissair



Stage II Modern Market Ist Floor

BUS STAND CENTRE ROAD, JAFFNA. Phone 22040—22065



தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தெளிவாக கண்டுகளிக்க வெளிநாட்டில் பயின்ற தொழில்நுட்ப வல்லுநர்களால் ஒருவருட உத்தரவாதத்துடன் ஏரியல் அமைத்துக்கொள்ள

**மட்றூஸ் - ரூபவாகினி**

**வீனஸ்** 266/1, ஸ்ரான்லி வீதி, (ஸ்ரீதர் தியேட்டர் அருகில்) யாழ்ப்பாணம்.

**நியூ வீனஸ்** 79/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(10 மைல் தூரத்திற்குள் வாகனக்கூலி இலவசம்)

**மணிவாக்கு**

''ஓராதார் உள்ளத்துள் ஒளிக்கும் ஒளியானே''

— மாணிக்கவாசகர்.

# நமது நோக்கு

## ஆன்மீக ஒருமைப்பாடு

'எல்லோர்க்கும்பெய்யும் மழைபோல் மகாவலி நீரும் 'சாதி குலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறுது' இந்த நாட்டிலுள்ள அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்படும்' என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன மாதுறுஓயா திறப்பு விழாவில் உறுதி அளித்திருந்தார்.

''மழை பெய்ய மறுக்கிறது; மகாவலியும் இங்கு வர மறுக்கிறது'' என்று முறையிட்டிருக்கிறார் வவனியா எம்.பி. திரு. சிவசிதம்பரம்.

வவனியா எம். பியின் ஏமாற்றம் தெய்வத்துக்கும் அரசுக்கும் எதிரான முறையீடு எனலாம்.

அதனை ஆராய்வதிலும் அவசியமானது மழையின்மையும் நெடுங்கால வறட்சியும்.

எந்த நீர்த் தேக்கமும் மழையில் தங்கியிருக்கிறது. நாட்டின் மூலை முடக்குகளெல்லாம் மகாவலியை நம்பி வாழவில்லை.

எனவே அரச நீதிக்கும் அவசியமானது தெய்வ நீதி. அதுவே மழையை வருவிப்பது.

நீதிக்கும் கருணைக்கும் உள்ள நுண்ணிய வேறுபாட்டை விளக்கிய உலக மகாகவி ஷேக்ஸ்பியர், வானிலிருந்து சாதுவாகப் பெய்யும் மழை போன்றதே கருணையென்றார்.

கருணை அருகிவரும் உலகில் வானம் பொய்ப்பது மூட நம்பிக்கை என்று சொல்லலாமா? நியூற்றன் குண்டுகள் மழைக்கு வழிவிடுமா?

மனித குலத்தின் இழிந்தபோக்கை உணர்வது அவசியம். சாதியிலே, மதங்களிலே, சமய நெறிகளிலே, அரசியல் கோட்பாடுகளிலே, கட்சி வேறுபாடுகளிலே எமது நாடு இன்றும் காலம் போக்குவது கண்கூடு.

ஒரு மதத்தைச் சேர்ந்தவர் பிற மதத்தினரைக் கண்டிப்பது பெருங் குற்றமென்பதை இன்றும் உணராத மனிதர்கள் உண்மையில் மனிதப் போலிகள் ஆவர்.

கடவுள் உண்டென நம்பி வாழ்ந்தவர்கள்; வாழ்கின்றவர்கள் நடந்துகொண்ட விதம் உலகில் நாத்திகக் கொள்கையை விருத்திசெய்ததை யார் மறுப்பார்?

கடவுட் கொள்கைக்கு மாறான மதச் சண்டைகள், தீண்டாமை, உயிர்ப் பலி போன்ற தீச் செயல்கள் எங்கள் சமூகத்தை இன்னும் பலவீனப்படுத்தி வருகின்றன.

ஆனிமகமாகிய இன்றைய தினம் இந்நாட்டுச் சைவர்களுக்கு மகத்தான தினம். கடவுள் உண்டென்று நம்பி வாழும் மக்களுக்குப் புத்துணர்ச்சியளிக்கும் தினம்.

திருவெம்பாவை காலத்தில் இந்த நாட்டிலுள்ள சைவக் கோவில் எதிலாவது மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகம், குறிப்பாக விடியுமுன் படிக்கப்படும் திருவெம்பாவை, பல கோவில்களில் படிக்கப்படும் திருவாதவூர்ப் புராணம் இந்தக் கம்பியூட்டர் யுகத்திலும் குறைந்தபாடில்லை. எனவே மழை பெய்ய முற்றாக மறுத்துவிடும் என்ற அச்சம் ஆதாரமற்றது.

ஆயினும் மாணிக்கவாசக சுவாமிகளை இன்று இறைஞ்சும் சைவ மக்கள் 'வாதவூரெங்கோன்' பற்றிய ஆராய்ச்சியில் அவர் 'புத்தரை வாதில் வென்ற சருக்கத்தில்' அதிக கவனம் செலுத்துவது பொருத்தமற்றது.

நாத்திகம் வளர்த்தமாதிரி நாம் சமயப் பிணக்கை வளர்ப்பது அநாகரிகமானது.

சமயங்கள் எவையும் சுட்டுகின்ற கோட்பாடுகளை எளிதில் தகர்த்து விடமுடியாது. மகமது நபியின் சகோதரத்துவமும், யேசுநாதரின் அன்பும், புத்த பெருமானின் அஹிம்சையும் இந்துக்களின் தெய்வபக்தியும் உலகனைத்துக்கும் ஒரு பொது மூலதனமெனலாம்.

''மதம் எதுவென்றாலும் கடவுளிடம் நம்பிக்கை வைத்து கடவுளுக்கு மட்டுமே அஞ்சி நடப்போமானால் நாம் எவருக்கும் அஞ்ச வேண்டியதில்லை'' என்று ஆன்மீக ஒருமைப்பாட்டின் வரைவிலக்கணத்தை ஒரு வசனத்தில் பிழிசாறாகத் தந்திருக்கிறார் மகாத்மா காந்தி.

கடவுளைப்பற்றி அதிகம் கவலைப்படாதவர் ஆங்கில அறிஞர் பேர்னட் ஷா என்பது பொதுவான நம்பிக்கை. ஆனால் அது முற்றான உண்மையல்ல வென்பது அவருடைய 'வேரில்லா மரம்' உணர்த்துகிறது.

'சமயப்பற்றற்ற ஒழுக்கம் வேரில்லா மரம் ஊற்றுக் கசிவில்லாத ஓர் ஓடை; அது மணல்மேல் மனை, மழையில்லாத போது வாழலாம்; ஆனால் புயல்வந்தால் தாங்காது' என்கிறார் அறிஞர் ஷா.

எங்கள் நாட்டில் வாழும் சைவர்களுக்கு உரித்தான இத்தினத்தில் பெரும்பான்மையராக வாழும் பௌத்த மக்களுடன் இந்துக்கள் அன்னியோன்னியமாய் வாழ மதரீதியில் அதிக வாய்ப்பு உண்டு. அதனை எதிர்மறையாக மாற்றுவதும் கடினமல்ல. இன்றைய நிலை இதன் அபாயத்தை உணர்த்துகிறது.

நாகதீபம் தொடக்கம் கதிர்காமம்வரைக்கும்உள்ள பல புராதன சைவாலயங்களில் பௌத்த மக்கள் இந்துக்களுடன் சேர்ந்து வழிபடுவது நெடுங்கால வழக்கம்.

புத்த பிரான் மனிதன் உள்ளத்தில் உள்ள ஒளியை எவ்வாறு தூண்டிவிடலாமென்பதில் கவனம் செலுத்தினார்.

எவருக்கும் தீங்கு செய்யாமல் எல்லோரும் ஒற்றுமையாக வாழ நெறி வகுத்து வாழ்ந்து காட்டினார்.

மழையில்லாது நாம் வாழும் ரகசியம் என்ன என்பதை நாம் உணர வேண்டிய அவசியம் புலப்படுகிறது.

## குமரி அனந்தனை தாக்க முயற்சி

சென்னை ஜூலை. 12

காந்தி - காமராஜ் தேசிய காங்கிரஸ் தலைவர் திரு. குமரி ஆனந்தனை திருவொற்றியூரில் வைத்துச் சிலர் தாக்க முயன்றதாக அவர் பொலிஸில் புகார் செய்துள்ளார்.

# திருவாசக நினைப்பு

**[டாக்டர் திரு. வ. சுப. மாணிக்கம் அவர்கள் 82 ஆகஸ்ட் திருக்கோவில் பத்திரிகையில் எழுதிய கட்டுரையை தழுவி எழுதியது. மானிக்கவாசகர் குருபூசையை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.]**

உண்மையே கடவுள் என்று காந்தி அறிவுறுத்தியது போல் நினைவுதான் வாழ்வு என்ற அடிப்படை அங்கீகரிக்கப்பட்டபின் நினைவு எவ்வண்ணம் இருத்தல் வேண்டும், எவ்வண்ணம் இருத்தலாகாது என்று தெளிவாக அறிதல் அவசியம்.

''உண்டு உடுத்து இங்கு இருப்பதானேன்'' எனவும் ''ஊனுர் புழுக்கூடு இதுகாத்து இங்கு இருப்பதானேன்'' எனவும் உணவுக்கு முதன்மை கொடுக்கும் வாழ்வை திருவாசகம் இகழ்ந்துள்ளது. உண்பது உறங்குவது ஊடுவது தொடர்பான நினைவுகளெல்லாம்மனித வாழ்வைச் சிறப்பிக்கும் நினைவுகள் என்று கருதலாகாது. இவற்றை உயர்ந்த நினைவுகளென்றும் நல்ல எண்ணங்களென்றும் சொன்னால் மரஞ்செடிகொடி பறவைவிலங்கின மெல்லாம் சிந்தனையுணர்வுடை சிறப்புக்கு உரியனவாய்விடும். ஆகவே எண்ணம், நினைவு, சிந்தனை என்று குறிப்பிடுவது மனவளர்ச்சிக்கும் உயிர்ப்பண்புக்கும் மேன்மை தரும் கருத்துக்களேயாகும்.

நம் பிறப்பு உயர்திணைப் பிறப்பாக உருப்படவேண்டும் என்று விரும்பினால் நல்ல தூய, உயர்ந்த எண்ண விதைகளை நம்மனதில் விதைக்கவேண்டும்.

சிறந்த சிந்தனை வித்துக்கள் கிடைக்கக்கூடிய இடம் திருவாசகம் என்னும் நூல் எனலாம். பெருந்தொகையான எண்ணக் களஞ்சியமாகவும் யாரும் பயன்பெறத்தக்க தன்மையுடையதாகவும் திருவாசகம் விளங்குகின்றது.

நினைவே வாழ்வாதலின் நல்வாழ்வுப்பயிற்சி பெறவிரும்புவோர் திருவாசக எண்ணங்கள் மனத்தில் பதியும்படி அடிக்கடி திருவாசகத்தைப் பயிலுதல் வேண்டும்.

ஒருசில நொடிகள் பயின்றாலும் கூடதிருவாசகத்தாள நம் உள்ளக் கலக்கம் நீங்கித்தெளிவும் அமைதியும் பிறக்கும். இத்தகைய நூல்களின் துணைகொண்டு வாழ்வை செப்பனிட வேண்டும் என்பதை வ.உ.சி. அவர்கள் ''ஒண்மைசால் நூல் கொடு வெண்மைகளைக'' என்று கூறியுள்ளார்.

திருவாசகச் சாணையில் நம் அறிவைத் தீட்டினால் என்ன பிறக்கும்? எக் காலத்தில்

[6-ம் பக்கம் பார்க்க]

## ''பாடசாலையும் விடுதியும் ஒன்றோடொன்றுஇணைந்தது''

(மானிப்பாய்)

''ஒரு பாடசாலைக்கும், அங்குள்ள மாணவர் விடுதிக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. மாணவர்களை விடுதிவாழ்க்கை பூரணப்படுத்துகிறது. 1935ம் ஆண்டில் இந்தப் பாடசாலையின் விடுதி ஆரம்பிக்கப்பட்ட போதிலும், இடையிடையே நிறுத்தப்பட்டு, மீண்டும்1977ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதனை ஆரம்பிப்பதற்குகாரணமாக இருந்த இளைஞர் ஜெயபாலனின் உழைப்பை இக்கட்டத்தில் நினைவுகூராமல்இருக்க முடியாது!''

இவ்வாறு மானிப்பாய் இந்துக்கல்லூரி விடுதி மாணவர் ஒன்றியத்தின் ஏழாவது வருட இராப்போசன விருந்துபசாரம் நேற்று முன்தினமிரவு நடைபெற்றபோது, அங்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கல்லூரி முன்னாள் அதிபர் திரு எஸ். ரி. சாரி பேசுகையில் குறிப்பிட்டார். இவ்விருந்துபசாரத்தில் திருமதி ஏ. எஸ். ரி. சாரியும் கௌரவிக்கப்பட்டார். கௌரவ விருந்தினராக விடுதி முன்னாள் ஆசிரியர் திரு வி. ஜெயபாலன் கலந்து கொண்டார்.

விடுதி மாணவர்களின் விருந்துக்கு முன்னதான பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் மிக நல்ல முறையில் மாணவர்களால் நடத்தப்பட்டது.

பாடசாலை அதிபர் திருஎஸ். வி. மகேஸ்வரவேலு பேசுகையில், கல்விப்பகுதியினர் இந்த விடுதியைப் பொறுப்பேற்று நடாத்துவதற்கான அறிகுறி தென்படுவதாகக் கூறினார். உப அதிபர் திரு வி. சுந்தரலிங்கத்தின் உழைப்பைப் பாராட்டியும் பேசினார்.

மன்றத் தலைவர் ஏ. திருநாவுக்கரசு, விடுதி மாணவர் நலமுற பேசினார். திரு. பி. பாலேந்திரா விருந்தினர் மகிழ உரை நிகழ்த்தினார்.

சகோதர மன்றச் சார்பில் யாழ். இந்துக் கல்லூரி மாணவன் திரு. எஸ். உதயராஜன் வாழ்த்தினார். மன்றச் செயலாளர் செல்வன் ரி. ரவீந்திரன் நன்றி கூறினார்.

## பருவகால சீட்டுபெறுவதில் ஏற்படும் கஷ்டம்: இ.போ,சவுக்குசிலயோசனைகள்

பருவகாலச் சீட்டுக்கள் ஒவ்வொரு 25ம் திகதி தொடக்கம் 5ந் திகதிவரை நாட்டின் பல்வேறு போக்குவரத்துச் சபைகளிலும், அதன் துணை நிலையங்களிலும் வழங்கப்பட்டு வருகின்றன. இவை காலை 9 மணி முதல் மாலை 5- 30 மணி வரை வழங்கப்படுவதை யாவரும் அறிவார்கள். ஆனால் பிரயாணிகள் காலை 7 மணி முதல் வரிசையில் நிற்க வேண்டியுள்ளது. வேலைத்தலங்களில் வேலை செய்பவர்கள், ரியூசன் மாணவர்கள் ஆகியோர் அதிகாலையிலேயே வந்து காத்திருந்து சீசன் ரிட்கெட்டுகளைப் பெற்றால்தான் குறிப்பிட்ட நேரத்திற்கு வேலைக்கோ அல்லது ரியூசனுக்கோ போகமுடியுமென அவர்கள் கருதுகிறார்கள். அவர்களது எண்ணம் நியாயமானதுதான். காலைச்

### மக்கள் கருத்து

சாப்பாட்டைகூட சரியாகச் சாப்பிடாது அவசரமாகவந்து காத்திருக்க வேண்டியுள்ளது. அப்படி அவர்கள் அதிகாலையில் கஷ்டப்பட்டு வந்து வரிசையிலும் வெயிலிலும் பொறுமையாக காத்திருக்கும் போது, அவர்களின் பொறுமையை சோதிப்பது போல சாரதிகளும், பஸ் நடத்துனர்களும் இடையே புகுந்து தமக்கேயுரிய செல்வாக்கைப் பயன்படுத்தி ஏராளமான சீசன் ரிக்கெட்டுகளைப் பெற்றுச் செல்லுகின்றனர். இதைவிட அறிந்த தெரிந்தவர்களும், மற்றும் கெட்டித்தனமுள்ளவர்களும் இடையே புகுந்து அதிக சீசன் ரிக்கட்டுகளைப் பெறுகின்றனர். மணிக் கணக்காக வரிசையில் நின்று வாடியவர்களது நிலை என்ன? இறுதியில் ''ரிக்கெட் முடிந்துவிட்டது நாளைக்கு வாரும்'' என்றுகூறி அனுப்பி விடுகிறார்கள். இதனால் வேலைகளையும், ரியூசன் படிப்பையும் விட்டு சீசனுக்காக வந்தவர்கள் தமக்குள்ளே திட்டிக் கொண்டு செல்லுகிறார்கள். அவர்களால் வேறென்னதான் செய்முடியும். இப்படியே இரண்டு மூன்று தினங்கள் அலைந்து திரிந்துதான் சீசன் எடுக்கவேண்டியுள்ளது. சிலர் அவ்வாறுகூட எடுக்க முடிவதில்லை. ஒரு பிரதான பஸ் நிலையமொன்றில் ஒழுங்கை நிலைநாட்ட ஒருவரை நியமித்துள்ளார்கள். அவர் உதவி எப்போதும் இறுதியிலேயே கிடைக்கிறது. அவர் வருமுன் முன்வரிசையில் ஏராளமானோர் புகுந்து கொள்கிறார்கள்.

இவ்வளவு பிரச்னைகளையும் எப்படி நிவர்த்தி செய்யலாம்?

1. பாரபட்சமற்ற முறையில் அனைவரையும் வரிசை முறையாக நிறுத்தி சீசன்களை விநியோகிக்கலாம்.

2. வரிசை ஒழுங்குகளைக் கவனிக்க முன் கூட்டியே ஒருவரை நியமிக்கலாம்.

3, தபால் மூலம் சீசன்களை விநியோகிக்கலாம்.

4. ரிக்கெட் விநியோகிக்கும் இடங்களை (Counter) அதிகரித்தல். இருபிரிவாகவோ? அல்லது மூன்று பிரிவுகளாகவோ ரிக்கெட்டுகளை வழங்கலாம்.

5. விரைவாக முடிவடையும் சீசன் ரிக்கெட்டுகளை அதிகமாக தருவித்து விநியோகிக்கலாம்.

6. ஒருவருக்கு ஒரு ரிக்கெட்டையே வழங்கலாம்.

7. பஸ் ஊழியர்கள் ஒரு குறிக்கப்பட்ட தினத்தில் மட்டும் சீசனைப் பெறவழி அமைத்துக் கொடுக்கலாம்.

8. ஒவ்வொரு நிறுவனமும் தத் தமது நிறுவனத்தில் படிக்கும் அல்லது வேலை செய்வோரிடமிருந்து, பணத்தையும், சீசன் பொறுவதற்குரிய பட்டியலையும் தயாரித்து, போக்குவரத்து சபைக்கு அனுப்பி சீசன்களைபெற போக்குவரத்து சபை வழிசெய்ய வேண்டும்.

இவ்வாறு செய்வதால் சீசன் ரிக்கெட்டிற்கான பிரயாணிகளின் நெருக்கடி குறையும்என என்னுகிறேன். எனது மனதில் பட்டயோசனைகளை இங்கே கொடுத்துள்ளேன். இதை போக்குவரத்துச்சபை கவனிக்குமா?

**வன்னியகுலசிங்கம்**

இடைக்காடு,
அச்சுவேலி,

## கிழக்கில் சைவம் வளர்க்கும்தாரகை

(சுழிபுரம்)

''கிழக்கில் சைவம் வளர்க்கும் தாரகையாக விளங்கவுள்ளவர் திரு டி. எஸ். காந்தன். இவர் சமயக் கிரியைகளை சமய நூல்களை எல்லாம் நன்கு கற்று யாவருக்கும் சிறப்பாக விளக்கும் ஆற்றலைப் பெற்றுள்ளார். இளைஞரான இவர் தமது இரு சுட்டுவிரல்களை உயர்த்தி தமது கருத்தைப் புரிய வைக்கும் பாணி யாவரும் சிறப்பாக ஏற்கக் கூடியதாகவுள்ளது. இவரது எதிர்காலம் சைவ தமிழ் உலகுக்கு நன்கு பயன்படும் என்று எதிர்பார்க்கலாம்''

இவ்வாறு அருட்புலவர் பண்டிதர் அ. ஆறுமுகம் வழக்கம்பரை அம்மன் கோவிலில் உற்சவ காலத்தில் பத்துத் தினங்கள் அபிராமியந்தாதி விரிவுரை செய்து வந்த செல்வன் டி. எஸ். காந்தன் பாராட்டு விழாவிற்கு தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஆசிரியை சங்கீத பூஷணம் ந. இராசரத்தினம் வாழ்த்துப் பத்திரம் வாசித்து அளித்தார்.

சுழிபுரம் மேற்கு கிராமோதய சபைத் தலைவர் திரு. மு. தம்பிஐயா புத்தக அன்பளிப்பை வழங்கினார். திரு. சோ. க. வேலாயுதர் பணம் அன்பளிப்புச் செய்து கௌரவித்தார்.

# பிரிட்டனில் மீண்டும் மரணதண்டனை: சர்வதேச மன்னிப்புச்சபை கண்டனம்

**லண்டன், ஜுலை. 12 பிரிட்டனில் மரண தண்டனை மீண்டும் அமுல் செய்யப்படுவதை மனித உரிமைகள் இயக்கமான சர்வதேச மன்னிப்புச்சபை கண்டித்துள்ளது.**

இதுதொடர்பாக பிரிட்டிஷ் அரசாங்கத்தால் கொண்டு வரப்படவுள்ள பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கும்படி சர்வதேச மன்னிப்புச்சபை பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கேட்டுள்ளது.

43 நாடுகளில் மரணதண்டனை ஒழிக்கப்பட்டுள்ளதாகவும், 127 நாடுகளில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுவருவதாகவும் சர்வதேச மன்னிப்புச்சபையினுல் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''அவுஸ்திரேலியா, அமெரிக்காவில் மாநிலங்களில் மட்டுமே மரணதண்டனை நிறைவேற்றப்படுகிறது. பிரிட்டனில் 1964ம் ஆண்டில் மரண தண்டனை நீக்கப்பட்டது. மீண்டும் அங்கு மரணதண்டனையை அமுல்செய்ய அந்நாட்டு அரசு தீர்மானித்துள்ளமையை வாபஸ் பெறவேண்டும்.

''ஈரானில் மன்னர் ஷா வெளியேற்றப்பட்டதின் பின்னர் 5,000க்கும் அதிகமான வர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஐ. நா. ஸ்தாபனமும் மரண தண்டனையை ஒழிக்க வேண்டுமென்று உலகநாடுகளைக் கேட்டுள்ளது. (வெ)

## ஈக்குவடோரில் விமானவிபத்து: 119 பேர் பலி

லண்டன், ஜுலை. 12 ஈக்குவடோர் நாட்டைச் சேர்ந்த அரசவிமானமொன்று விபத்துக்குள்ளானதில் அதில் பிரயாணம் செய்த 119பிரயாணிகளும் பலியானுர்கள்.

தெற்கு ஈக்குவடோரிலுள்ள மலைத்தொடர் ஒன்றுடன் மோதியபோதே 'போயிங் 737' என்ற இவ்விமானம் விபத்துக்குள்ளானது.

குயிற்ரோர் விமானநிலையத்திலிருந்து புறப்பட்ட 48 நிமிடங்களில் இந்த விமானம் விபத்துக்குள்ளானதாக விமானநிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

பலியானவர்களில் 111 பேர் பிரயாணிகளும், 8பேர்விமான சிப்பந்திகளுமாவர். இவ்விமானத்தைச்செலுத்திச்சென்றவர் ஈக்குவடோர் நாட்டின் விமானப்படையின் முன்னுள் தலைவராவார்.

விபத்து நடைபெற்ற இடத்திற்கு செஞ்சிலுவைச் சங்க குழுவொன்றும், ஈக்குவடோரின் இராணுவக்குழுவொன்றும் விரைந்துள்ளன.

ஈக்குவடோரில் கடந்தஎட்டு ஆண்டுகளில் நான்கு பெரும் விமான விபத்துக்கள் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (வெ)

## மணிப்பூரில் புரட்சிக்கட்சி உறுப்பினர் மூவர் கைது!

புதுடில்லி, ஜுலை. 12 மணிப்பூரிலிருந்து 80 கிலோ மீட்டர் தூரத்தில் வைத்து புரட்சிக்கட்சியொன்றின் 3 உறுப்பினர்கள் ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து ஆயுதங்கள், வெடிமருந்துகள், சட்ட விரோத தஸ்தாவேஜுகள் ஆகியன கைப்பற்றப்பட்டன.

இவர்கள் பலகொலை, கொள்ளை வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களென்றும் கூறப்பட்டது. (வெ)

## வரதட்சணைக் கொடுமை: கணவன், மாமன் கைது!

சென்னை, ஜுலை. 12 வேலூரில் வரதட்சணைக் கொடுமை செய்ததாக ஒரு பெண்ணின் கணவரும், மாமனும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சுமார் ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் திருமணம் செய்த பட்டதாரிப்பெண்ணுெருவரை வரதட்சனை கொடுக்காததால், கணவரும், மாமனும் தம்மை அடித்துக் கொடுமைப்படுத்தியதாக அப்பெண் பொலிசில் புகார் செய்திருந்தார்.

இதனையடுத்தே இவர்களிருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இப்பெண்ணின் மாமியாரைப்பொலிசார் தேடிவருகின்றனர். (வெ)

### பரிசு

சென்னை ஜுலை. 12 தமிழ் நாட்டில் கருத்தடைச் சத்திர சிகிச்சை செய்து கொண்ட பெண்ணுெருவருக்கு வழங்கப்பட்ட பரிசுச் சீட்டிற்கு ஒரு லட்சம் ரூபா பரிசு கிடைத்துள்ளது. (வெ)

## சோவியத் ஜனுதிபதி சுகயீனம்

மாஸ்கோ ஜுலை. 12 சோவியத் ஜனுதிபதி திரு. அந்ரபோவ் சுகவீனமடைந்துள்ளார். இவருடைய சிறு நீரகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (வெ)

## பஸ் விபத்து: 16 பேர் பலி!

புதுடில்லி ஜுலை. 12 உத்தரப் பிரதேசத்தில் இடம்பெற்ற பஸ் விபத்தொன்றின்போது 16 பேர் பலியானுர்கள். பஸ் பள்ளமொன்றில் விழுந்தபோதே இவ்விபத்து இடம்பெற்றது. (வெ)

## அகில இலங்கை சமாதான நீதவான்



திரு. சீ. எஸ். சுப்பிரமணியம் - வளர்ந்தோர் கல்வி அதிகாரி - யாழ்ப்பாண மாவட்டம் கௌரவ நீதிமந்திரி அவர்களால் இலங்கையிலுள்ள சகல நீதி மாவட்டங்களுக்கான சமாதான நீதவானுக நியமிக்கப்பட்டு மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. சீ. விக்கினேஸ்வரன் அவர்கள் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். அவர் இலங்கை சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்கத்தின் வடபிராந்திய ஆணையாளராகவும், தேசிய குற்றத் தடுப்புச் சங்கத்தின் அங்கத்தவராகவும், வனவிலங்கு இயற்கைப் பாதுகாப்புச்சங்க அங்கத்தவராகவும், இலங்கை சுய விரும்பிக் கருத்தடை சத்திர சிகிச்சைச் சங்க அங்கத்தவராகவும், யப்பான் ஒசிக்கா உறுப்பினராகவும், மாவட்ட சனத்தொகை சங்க உறுப்பினராகவும், உணவு போசாக்குக் கல்வித்திட்ட சங்க உறுப்பினராகவும், சுற்றுடல் பாதுகாப்புச் சங்க உறுப்பினராகவும் கடமையாற்றி வருகின்ருர். மறியற்சாலை உறுப்பினருக்கும், அங்கவீனருக்குமுள்ள புனர் வாழ்வுத் திட்டத்தைச் சமர்ப்பித்துள்ளார்.

இவர் பவியியல் டிப்புளோமா தொழில் வழிகாட்டல் டிப்புளோமா, சுகாதாரக் கல்வி டிப்புளோமா, வளர்ந்தோர் கல்வி டிப்புளோமா போன்ற பட்டங்கள் பெற்று ஐரோப்பிய, ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலுள்ள கல்வி நிலையங்களுக்கும் சர்வகலாசாலைகளுக்கும் சென்று கல்வித்திட்டங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்தவராவர். விசேட தலைமைத்துவப் பயிற்சியில் இருமுறை இங்கிலாந்திலே பங்குபற்றியவர். கடந்த 5 வருடங்களாக சுற்றுடல்கல்வி, சுகாதாரக்கல்வி, உணவுப் போசாக்குக் கல்வி, சனத்தொகைக் கல்வி ஆகியவற்றின் அடிப்படையில் வளர்ந்தோர் கல்வித்திட்டத்தின்கீழ் பல கருத்தரங்குகளையும் பயிற்சி வகுப்புகளையும் நடாத்தி வருகின்ருர். யாழ்ப்பாண மகளிர் குழுத்தலைவிகளுக்கான உணவு போசாக்குக் கல்வியை முதன்முதலாக ஒழுங்குபடுத்திய பெருமையும், சிறுவர் பாடசாலை ஆசிரியர்களுக்கான ஒரு வருடப் பயிற்சியையும் ஒழுங்குபடுத்திய பெருமையும் இவருக்குண்டு.


## உங்கள் வருங்காலம் பாதுகாப்பானதா ?

வெளி ஊர்களில் குறைந்த வட்டிக்கு உங்கள்
பணத்தை முடக்கி, அதனுல் பூரண
லாப வருவாயை இழந்து நிற்கும்

தமிழின மக்கட்கு

இனப்பற்று, கடமையுணர்ச்சி, சேமிப்பு ஊக்குவிப்பு

நோக்குடன்

★ தமிழர் நிதியம் ★

நிதி நிறுவனம் தரும்

### ஆபத்துதவி சேமிப்பு திட்டம்

36%

★ வெளியார் நிறுவனங்களில் வைப்பிடப்பட்டுள்ள உங்கள் முதலீட்டை எம்மிடம் வைப்பிட்டால் நாம் 36% வட்டியை வழங்குகின்ருேம்.

★ தன்னிலைக்கு ஆபத்தை தரும் குழப்பம், மற்றும் எதிர்பாராத விளைவுகளால் ஏற்படும் கஷ்டம் ஆகியவற்றுக்கு திடீரென தேவைப்படும் பணத்தை உங்கள் முதலீட்டுக்கெதிராக கடனுக உடனடியாகப் பெறலாம்.

★ எம்மிடம் வைப்பிடப்படும் உங்கள் முதலீடு உங்கள் தேவைக்கேற்ப, உங்கள் பிறப்பிடங்களில் பாதுகாப்பாக முதலீடு செய்யப்படுவதுடன், பயண ஆபத்து, பலவகை பிற ஆபத்து நஷ்டங்களிலும் இருந்து உங்களைக் காக்கின்றது.

★ உங்கள் பூமியில் உங்கட்காக உங்கள் வைப்பீடு, முதலீடு நோக்கில் செயற்படும் ஒரே நிறுவனம் எமது நிறுவனமே.

உங்கட்காக நாம் செயற்படுத்தும் ★ காப்புறுதித் திட்டம் ★ உடமை அழிவு நட்டோத்தரவாத திட்டம் ★ வர்த்தக ஸ்தாபன சேத மீட்பு சேமிப்புத் திட்டம் ★ நாளாந்த மாதாந்த ஏலச்சீட்டுத் திட்டம்.

ஆகியவற்றில் பங்கு கொண்டு
உங்கள் வருங்காலத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ளுங்கள்,

**விபரங்கட்கு உடன் தொடர்பு கொள்ளுங்கள்**

உங்கள் வாழ்விற்கு
நாம் உறுதுணை.

**THAMIL FUNDS AND FINANCE LIMITED**
140 நாவலர் வீதி, யாழ்ப்பாணம், ஸ்ரீலங்கா.
140 NAVALAR ROAD, JAFFNA, SRI LANKA. ☎ 437

Regd No. PVS 8384

**சாந்தி** யாழ்.
தினசரி 3 காட்சிகள்
கடைசித்தினம் 15-7-83
**தியாகம்**
(கலர்)

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 4-15, 7-00
சனி, ஞாயிறு 1-40
முத்துராமன்—தேவிகா
**நெஞ்சில் ஓர் ஆலயம்**

**ஸ்ரீதர்** தினசரி 10-30, 2-00, 4-30 7-00
(யாழ்ப்பாணம்)
The Empire Strikes Back
வருகிறது
**மூன்றும் பிறை**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
6-30, 9-30
பிரதாப்— சோபா
**மூடுபனி**

**லிடோ** (யாழ். நகர்)
சிவாஜி-மஞ்சுளா
**மன்னவன் வந்தானடி**

**ராணி** தினசரி 10-30, 2-30, 6-15 மட்டும்
(யாழ். நகர்)
ஜனத்திரள் நிறைந்த 8-வது வாரம்
கமலஹாசன் - அம்பிகா
**சகல கலா வல்லவன்**

28-7-83 வரைமட்டும்
**மனோகரா** தினசரி 4 காட்சிகள்
3வது வெற்றி மாதம்
(யாழ். நகர்)
கமலஹாசன், ஜெய்சங்கர், ஸ்ரீதேவி
**வாழ்வே மாயம்**
(ஈஸ்ட்மன் கலர்)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 4-30, 7-00
துள்ளிசைப் பிரியர்களுக்கு அரிய சந்தர்ப்பம்
HAIR DONT MISS THIS MUSICAL BONANZA-TOP BANDS
14 முதல் ஜெய்சங்ர் நடித்த
**வாயாடி**
விரைவில் வருகிறது
ஆனந்த ராகம்

**றீகல்-Regal** தினசரி 10-30, 2-00, 4-45
7-15 P. M.




இன்னும்
12 தினங்கள் மட்டும்
கபீர்பேடி....
சனும் சூரி...
நடிக்கும்
"கேர்ல்
(f)ப்ரம்
இந்தியா"
GIRL FROM INDIA
TECHNICOLOR
இனிய நான்கு
ஹிந்திப் பாடல்கள்
உங்களை
மெய்மறக்கச் செய்யும்
வயது வந்தவர்கள்
மட்டும்!


# இன்றைய பலன்

ஆனி 29ம் திகதி
புதன்கிழமை
(13—7—83)

மேடம்: புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள் அரசியல்வாதிகளுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும் எடுத்த காரியத்தை முடிப்பதில் வெற்றியடைவீர்கள் பெரியவர் ஆசி உண்டு.

இடபம்: தொழில் துறையில் புதிய வெற்றி கிடைக்கும் மேலதிகாரிகளின் பாராட்டுதல்களுக்கு இலக்காகுவீர் சிலர் வாழ்க்கையில் கடல் கடந்த பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம்.

மிதுனம்: பொருளாதார நிலை சீரடையும் வாழ்க்கையில் எதிர்பாராத வரவுக்கு இடமுண்டு பத்திரிகையாளர்களின் வேதனம் உயர்த்தப்படலாம் வெளியூரில் இருந்துசெய்தியும் கிடைக்கும்.

கடகம்: செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாக இருக்கும் நண்பர்களின் தொல்லையினால் நஷ்டமடைவீர்கள் தொழில் புரியும் இடத்தில் எதிர்ப்பைச் சமாளிக்கவும்.

சிங்கம்: குமுறும் நெஞ்சத்துடன் நாளைக் கடத்துவீர்கள் எதிலும் அவசர முடிவைத் தவிர்த்துக் கொள்ளவும் பிரயாணத்தின்போது பொருள் நழுவக்கூடும்.

கன்னி: சுற்றுடலில் உங்கள் செல்வாக்கு வளரும் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றுவதில் அதிக கவனம் செலுத்தவும் குடும்பத்தில் பிணக்குகள் அதிகரிக்கும்.

துலாம்: பொறுமையின்நிழல் உங்களைத் தொடரும் உதவி செய்யப்போய்உபத்திரவத்தை தேடிக்கொள்வீர்கள்அரசபயத்திற்கும் இடமேற்படுமாகை

(6-ம் பக்கம் பார்க்க)


**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எம். ஜி. ஆர்—ஜெயலலிதா
**நீரும் நெருப்பும்**
(ஈஸ்ட்மன் கலர்)

இன்றுமுதல்
குதூகல ஆரம்பம்!
**ராஜா** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ்- அம்பிகா
சல்லாப்பட்டி சிங்காரம்
நடித்த



**அந்த 7 நாட்கள்**
(கலர்)
கதைவசனம், டைரக்ஷன்
பாக்கியராஜ்
(இந்தியாவில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச்சித்திரம்)


# கூட்டணி பொதுச்சபை கூட்டத்தில் நடந்தவை!

(ராஜகோபால்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் சபைக் கூட்டத்தில் வழங்கப்பட்ட புதிய பதவிகளையெல்லாம் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார் எனத் தெரிகிறது.

சிரேஷ்ட துணைத் தலைவர் பதவிக்கு வி. என். பெயரே முதலில் பிரேரிக்கப்பட்டு ஆமோதிக்கப்பட்டது. இந்தப் பதவியை ஏற்க இவர் மறுக்கவே, பின்னர் திரு. வெ. கைலாசபிள்ளை தெரியப்பட்டார்.

சாவகச்சேரி கிளையால் கொண்டுவரப்பட்டுத் தீர்மானிக்கப்பட்ட அரசியல் அதிகார சபையின் 'சூத்திரதாரி' யான வி. என். நவரத்தினம் அந்தக் கூட்டணிப் 'பொலிட் பீரோ'வுக்குத் தெரிவுசெய்யப்பட்டபோது அதனையும் உதறித் தள்ளிவிட்டார்!

தாம் ஜூலை 21க்குப் பின்னர் பாராளுமன்றம் போகப்போவதில்லையென்றும், பிரிந்துபோயிருக்கும் எல்லா அணிகளையும் ஒன்றுபடுத்துவதையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படப்போவதாகவும், அதனால் இந்தப் பதவிகளை ஏற்றுக் கொள்ள முடியாதிருப்பதாகவும் திரு. நவரத்தினம் விளக்கம் தெரிவித்தார்.

நல்லூர் எம். பி. யின் இல்லத்தில் நடந்த இப்பொதுச் சபைக் கூட்டத்தில், சட்டச் செயலாளர் பதவிக்கு சட்டத்தரணி எஸ். நவரத்தினம் (கரிகாலன்) தெரிவுசெய்யப்பட்டார். இதனைக் கரிகாலன் ஏற்க மறுத்துவிட்டார். திரு. சந்திரகாசனே இப்பதவிக்குப் பொருத்தமானவர் என்றும், இப்பதவியைத் தான் ஏற்றுக் கொள்வதால் கட்சிக்கும் சந்திரகாசனுக்குமிடையில் இன்னமும் விரிசல் ஏற்பட வழிபிறக்கலாம் என்றும் சொன்னார்.

அன்றைய பொதுச் சபைக் கூட்டத்திற்கு திரு. சந்திரகாசன் வராததால், அவர் சம்மதம் பெற்றபின்னரே அவரை இப்பதவிக்கு நியமிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் செயலாளர் நாயகம் திரு. அமிர்தலிங்கம், "சந்திரகாசன் கட்சியில் சாதாரண அங்கத்தவராகக்கூட இல்லை. அவர் தனது 'சுதந்திரன்' பத்திரிகையில் வேறொரு அணிக்கு உறுப்பினர்களைச் சேர்க்க அனுமதித்ததே பெரிய தப்பு" என்று குறிப்பிட்டார்.

## ஆடம்பரம் வேண்டாம்

"மன்னாரில் நடக்கவிருக்கும் கூட்டணி மாநில மகாநாட்டை ஆடம்பரமான முறையில் நடத்தப்போவதாகப் பத்திரிகைகளில் செய்திகள் அடிபடுகின்றன. இன்றைய நெருக்கடியான நிலையில் இது அவசியம் தானா? மகாநாட்டை நடத்தி, நமது பிரச்னைகள்பற்றி முடிவு எடுத்துவிட்டுத் திரும்பிவிட வேண்டும். ஆடம்பரமும் வேண்டாம்; அலங்கார வளைவுளும் வேண்டாம்" என்று பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொண்ட அங்கத்தவர் ஒருவர் தலைவரைப் பார்த்துக் கூறினர்.

"அப்படி யார் சொன்னது? நாம் நெருக்கடியான நிலையில் இருக்கும்போது ஆடம்பர மகாநாடு தேவையில்லை! அப்படி ஒன்றும் நடக்காது!" என்று தலைவர் திரு. சிவசிதம்பரம் பதிலளித்தார்.

அமெரிக்காவிலுள்ள மசாசூசெட்ஸ் மாநில அரசு ஈழத் தமிழருக்கு ஆதரவாக நிறைவேற்றிய தீர்மானமும் பொதுச் சபைக் கூட்டத்தில் ஒரு கட்டத்தில் பேசப்பட்டது.

யாழ்ப்பாணம் எம்.பி. திரு. வெ. யோகேஸ்வரன் இது சம்பந்தமாக ஒரு சந்தேகத்தைக் கிளப்பினர்.

"சி. ஐ. ஏ.யின் திருவிளையாடலாக இது இருக்கலாமோ?" என்பதே யோகேஸின் சந்தேகம். இதற்கு தலைவர் திரு. சிவசிதம்பரம் பதிலளித்தார்.

சட்டசபை உறுப்பினரான திருமதி மேரி டீ ஹாவே ஐரிஸ்காரி. அவர் பாதிப்புக்குள்ளானவர். இதனல் அவர் தமது பிரச்னைகளுக்கு உண்மையான தீர்வை விரும்புகிறவர். இதில் சி. ஐ. ஏ. தலையீடு கிடையாது!" என்றார்.

[6-ம் பக்கம் பார்க்க]


வருடமொன்றுக்கு உங்கள் பணத்திற்கு
**26% தொடக்கம் 30% வரை**
வட்டி பெற்றுக்கொள்ளுங்கள்.
குறைந்த தொகை ரூபாய் 1000/-
எந்நேரமும் அறிவித்தலின் பின்
முழுப் பணத்தையும் திருப்பிப் பெறலாம்.
விபரங்களுக்கு:
JAFFNA PROPERTY TRADES LTD.
3, நவீன சந்தை, (மேல்மாடி), யாழ்ப்பாணம்.
போன்: 23698

அரிய சந்தர்ப்பம் தவறவிடாதீர்கள்
**ஆரம்பம் 15-7-83**
பிரபல விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றன.
1. ஹோட்டல் மனேஜ்மென்ற் அன் ரூறிசம் (HOTEL MANAGEMENT AND TOURISM) 3 மாதப் பயிற்சி
2. றேடியோ அன் ரெலிவிசன் ரெக்னோலொஜி 4 மாதப் பயிற்சி
3. TELEX OPERATORS 2 மாதப் பயிற்சி
4. எலக்றிகல் வயறிங் 2 மாதப் பயிற்சி
5. FRENCH/GERMAN-CONVERSATION/GRAMMER ஒரு மாதப் பயிற்சி

செய்முறைப் பயிற்சிகளுடன் வகுப்புகள் நடாத்தப்படும்.
**KEEN INSTITUTE**
மணியம்ஸ் கட்டடம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# தமிழ் மாணவர் பேரவை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் இளைஞர் பேரவைச் செயலாளர் திரு. பன்னீர்ச் செல்வம் கைது செய்யப்பட்டு குருநகர் இராணுவ முகாமில் வைக்கப்பட்டுள்ளதை அறிக்கையொன்றின் மூலம் தமிழ் மாணவர் பேரவை கண்டித்துள்ளது.

தமிழ் மாணவர் பேரவை தலைவர் வேங்கை ஆனந்தன் விடுத்துள்ள இந்த அறிக்கையில் பன்னீர்ச் செல்வத்தை விடுதலை செய்யுமாறு முற்போக்குச் சக்திகள் அனைத்தும் வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார்.

## கூட்டணி...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

### அமிர் கண்டிப்பு

கூட்டணிக் கிளைகள் விரும்பியபடியெல்லாம் தன்னிச்சையாக அறிக்கைகள் பத்திரிகைகளுக்கு விடுவது குறித்து திரு. அமிர்தலிங்கம் பலத்த கண்டனம் தெரிவித்தார்.

கூட்டணித் தலைமைப் பீடத்தின் அனுமதி பெற்றே அறிக்கைவிடவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## திருவாசக...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

எதனை எதனை விடவேண்டும், எதனைக் கொள்ள வேண்டும் என்ற விளக்கம் பிறக்கும், திருவாசகம் உலக நல்வாழ்வை வெறுக்கும் நூல் என்று பலர் தவருக எண்ணுகின்றனர். அப்படியன்று. திருவாசகம் உலகவாழ்வை வெறுக்கும் நூலாய், குடும்பம், இன்பம், செல்வம், கல்வி, புகழ்என்பன வற்றை வெறுக்கும் நூல் என்ருல் ''அன்னவரே என்கணவராவார்'', ''உன்னடியார் தாள் பணிவோம்'' என்பன போன்ற பகுதிகளும் திருவம்மானை, திருப்பொற்சுண்ணம் முதலிய பகுதிகளும் இடம் பெறமுடியுமா? பெண்பால் உகந்து ஆடும் தில்லைச்சிற்றம் பலவனைப்பற்றிய திருச்சாழல் திருமணவாசகம் என்னும்படியன்ருே விளங்குகின்றது.

துறவுக் கருத்துக்கள் திருவாசகத்தில் உள்ளன என்பதை மறுக்கமுடியாது. நீத்தல் விண்ணப்பம் என்ற பகுதி துறவுக்கு வழிகோலுவது. இவ்விடத்தில் சில அடிப்படை உலகியலைச் சிந்திக்க வேண்டும். உள்ளத்தின் ஆசைகளையும் உணர்ச்சிகளையும் ஒவ்வொரு காலத்திலும் விட்டும், குறைத்தும் வளர்ச்சியடையவேண்டும். இத்தகை விடும் பண்பையும் கைக்கொள்ளும் பண்பையுமே திருவாசகமே நினைவுபடுத்துகிறது. திருவாசக நினைப்பு மென்மேலும் வளர்த்துக் கொண்டால் எயர்ந்த உயர்ப்பக்குவம் பெறலாம்.

## இன்றைய பலன்...

[5-ம் பக்கத் தொடர்ச்சி[

யால் ஈடுபடாதிருக்கவும்.

விருச்சிகம்: அறவழியில்நாட்டம் பிறக்கும் தாராள சிந்தை மேலிடும் எதிர்பார்த்த சுபகருமம் ஒன்றுக்கு இன்று வழி கோலப்படலாம் வாகனசாரதிகள் முன்னேற்றமடைவார்கள்

தனு: உல்லாசமாகப் பொழுதைப் போக்குவீர் இன்று அதிக சுறுசுறுப்புடன் செயலாற்றுவீர்கள் பிள்ளைகளின் நடவடிக்கைகள் பெருமையைத் தேடித்தரலாம்.

மகரம்: உறவாடிக் கெடுப்பதற்கு பகையாளிகள் முன்வருவார்கள் சிந்தையின் தாக்குதலால் உங்களை சிந்திக்க வைக்கும் குழந்தை ஒன்றின் வைத்தியச் செலவுக்கு இடமுண்டு.

கும்பம்: களத்திர வழியால் நன்மைகள் வந்து சேரும் குடும்பத்தில் தென்றல்வீசும் கவர்ச்சிகரமான நிகழ்ச்சிகளை ரசிப்பதில் காலத்தைக் கடத்துவீர்கள் இனபந்துக்களின் கொண்டாட்டம் உண்டு.

மீனம்: தென்றலும் தியாகமாறும் குடும்பத்தில் அபிப்பிராய பேதங்கள் தோன்றலாம் உணவு விடயத்தில் கவனம் செலுத்தவும் ஒன்றை நினைத்தால் அது நடைமுறையில் வேறு ஒன்ருய் அமையும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
**க. வேலுப்பிள்ளை**

# மரண அறிவித்தல்
## V. D. கணபதிப்பிள்ளை

சுண்டிக்குளியைச் சேர்ந்த பரியோவான் கல்லூரி இளைப்பாறிய இலிகிதர் V. D. கணபதிப்பிள்ளை அவர்கள் காலமானுர். இவரது பூதவுடல் நல்லடக்கத்திற்காக பரியோவான் சேமக்காலைக்கு 13 - 7 - 83 இன்று புதன் கிழமை பி. ப. 4 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

69, குருசோல் வீதி,
யாழ்ப்பாணம்.

7961

# மரண அறிவித்தல்
## R. செல்லையா

யாழ்ப்பாணம், R. Chelliah and Co; Pioneer Motor Stores Ltd., கொழும்பு. ஆகிய வர்த்தக ஸ்தாபனங்களின் உரிமையாளரும், திருமதி அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், செல்வராணி, கமலாம்பிகை, லீலாவதி, காலஞ்சென்ற ஆனந்தராஜா, மாமலர், துரைரத்தினம் (பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்), திருநாவுக்கரசு, பத்மினி, கருணநிதி அவர்களின் அன்புத் தந்தையும், Dr. துரைரத்தினம் (Brazil), திரு. தர்மராஜா (London), திரு. கந்தகுமாரன் ஆகியோரின் அன்பு மாமனுரும், திரு. தம்பிமுத்து, கணபதிப்பிள்ளை, கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரருமாகிய திரு. இராஜசிங்கம் செல்லையா அவர்கள் கொழும்பில் காலமானுர். அன்னுரின் ஈமைக்கிரியைகள் 13-07-83 புதன்கிழமை (இன்று) 2 மணியளவில் யாழ். மணிக்கூட்டு வீதி, 8-ம் இலக்க இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். 7959

## மன்னர்...!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டிருந்தது.

ஜீப்பின் சாரதி லீவில் சென்றமையால் கடந்தமூன்று, நான்கு தினங்களாக ஜீப் அதே இடத்திலேயேநிறுத்திவைக்கப் பட்டிருந்தது.

சம்பவதினம் மன்னர் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் செல்வி கனகரத்தினம் தலைமன்னர் கப்பலுக்குச் சென்று, பிரயாணிகளை வைத்திய பரிசோதனைசெய்துவிட்டு, ஆஸ்பத்திரி விடுதியில் வந்து இரவு உணவருந்திக்கொண்டிருந்தபோதே ஜீப்எரிய ஆரம்பித்ததாகப் பொலிசில் புகார் செய்துள்ளார்.

ஆனலும் இவரது முயற்சியைத் தொடர்ந்து ஆஸ்பத்திரி ஊழியர்கள் அனைவரும்சேர்ந்து தண்ணீர்ஊற்றி ஜீப்பின்தீயை அணைத்ததாகத் தெரிவிக்கப் பட்டது.

ஸ்தலத்திற்கு வந்த பொலிசார் காவலாளியையும், மலேரியா தடுப்பு இயக்கப்பொறுப் பதிகாரியையும் விசாரணைசெய்தனர்.

இதுதொடர்பாக எவரும் கைதுசெய்யப்படவில்லை.

## ரயில்சேவை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

படையில் எரிபொருள் வழங்குவதாக முடிவு செய்யப்பட்டது.

பஸ் சேவை கூட வர வர நாளுக்கு நாள் குறுகிக்கொண்டேசெல்கிறது. நேற்று முதல் மாலை நான்கு மணியுடன் பஸ் சேவை நிறுத்தப்பட்டது. சில பாதைகளுக்கு பஸ் சேவை இல்லை. ஓடுகின்ற பஸ்களும் குறைவு. இந்த நிலையில் தனியார் பஸ்கள் பொதுமக்களின் நன்மை கருதி சேவையிலீடுபட்டுள்ளன. இத்தனியார் பஸ்கள்கூட எரிபொருள் நிலையங்களுக்கு முன்பாக 'கியூ'வில் நிற்கின்றன! டீசலும் பங்கீட்டு அடிப்படையிலேயே வழங்கப்படுகிறது.

வட பிராந்திய போக்குவரத்துச் சேவையைப் பொறுத்தவரை போதியளவு டீசல் எண்ணெய் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனல் பஸ்களுக்குத் தீ வைக்கப்படுவது சம்பந்தமாகவே சேவை நேரங்கள் குறைக்கப்படுவதாகக் கூறப்பட்டது.

யாழ்ப்பாணப்பகுதியில் தீ வைக்கப்பட்டு முற்ருக எரிந்த இரு பஸ்களினுல் 8 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

மண்ணெண்ணைத் தட்டுப்பாட்டால் குறிப்பாக விவசாயிகள் பாதிக்கப்படுகிருர்கள். சிலர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க அதிக விலைக்கு மண்ணெண்ணை, பெற்ருேல், டீசல் போன்றவற்றை விற்று லாபம் சம்பாதிக்க முற்படுவதாகப் புகார்செய்யப்பட்டுள்ளது.

பஸ்சேவை நேரம் குறைக்கப்பட்டதால் யாழ். நகர் இரவு ஆறுமணிக்குப்பின்னர் சோபை இழந்து காணப்படுகிறது.

வர்த்தக நிலையங்களும், கடைகளும் ஆறு மணிக்குமுன்னரே இழுத்துப் பூட்டப்படுகின்றன.

''பொதுமக்கள்நடமாட்டம் இல்லையே. ஏன் கடைகளைத் திறந்துவைத்திருப்பான்'' என்ற நிலை ஒரு பக்கம்; ''நேர காலத்தோடு வீடு சேரவேண்டும்; போக்கு வரத்து வசதி இல்லை'' என்பது மற்ருெரு முக்கியகாரணம் என்கிருர்கள்.

இந்த நிலைமை யாழ். நகரில் மட்டுமல்ல வடபகுதியிலுள்ள நகரங்கள் - பட்டினப்பகுதிகளுக்கும் நீடித்துள்ளது.

பஸ்போக்குவரத்து சேவைக் குறைப்பால் சினிமாத் தியேட்டர்களிலும் இரவுக்காட்சிகள் லீறுத்தப்பட்டுள்ளன!

(மா)

யாழ். மாவட்ட அபி. சபை

# உப அலுவலகத்தில் எம்.பி.க்கு ஏற்பட்ட அதிர்ச்சி

(கரவெட்டி)

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் உடுப்பிட்டி உப அலுவலகத்திற்குதிடீர்விஜயம் மேற்கொண்ட உடுப்பிட்டி எம். பி.யும் யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை நிறைவேற்றுக்குழு உறுப்பினருமான திரு. த. இராஜலிங்கம் அதிகாரிகள் அங்கு இல்லாதது கண்டு அதிர்ச்சியடைந்தார்

கடந்த திங்கட்கிழமை காலை பதினெருமணியயவில் அவர் அங்கு சென்றபோது நிர்வாக உத்தியோகத்தரும், மின்முகாரியும் எதுவித அறிவித்தலுமின்றி சமுகமளிக்கவில்லை.

மின்முகாரியினதும் அவரது குழுவினரதும் வரவு இடாப்பைத்தேடியும்கிடைக்கவில்லை. அதனுடன் இங்கு கடமையாற்றுகின்ற ஆறு உத்தியோகத்தரும் எவ்வித அறிவித்தலுமின்றி சமுகமளிக்கவில்லை.

1982ம் ஆண்டு நிதிஒதுக்கீட்டில் திட்டமிடப்பட்ட மின்சாரத்திட்டங்கள் உறங்கு நிலையிலுள்ளன. இவைபற்றி அவர் சம்பந்தப்பட்டவர்களை விளக்கம் கோரியுள்ளார். அத்துடன் யாழ். மாவட்ட சபைத் தலைவருக்கும் உடன் நடவடிக்கை எடுக்கக்கோரித் தந்தி ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

# மட்டக்களப்பில் வன்செயல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

23 ஸ்ரீ 8718 இலக்கமுடைய இந்தபஸ் முற்ருகச்சேதமடைந்தது.

இரவு 9 மணியளவில் சின்ன ஊறணி என்ற இடத்தில் வர்த்தகர் ஒருவருக்குச்சொந்தமான கார் ஒன்றுக்கு சில இனந்தெரியாத இளைஞர்களால் தீ வைக்கப்பட்டது. உடனடியாகத் தீ அணைக்கப் பட்டதால், கார் முற்ருகச் சேதமடையவில்லை.

மட்டக்களப்புச் சந்தைப் பகுதியிலுள்ள கடையொன்றுக்குத் தீ வைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்ட போதிலும், இங்கும் தீ பரவாது அணைக்கப்பட்டது! அக்கடைக்குள் தமிழீழ விடுதலைப் புலிகள் எனக் குறிப்பிடப்பட்ட எச்சரிக்கைக் கடிதமொன்றும் காணப்பட்டதாம்.

இச்சம்பவங்களை அடுத்து, பாதுகாப்புக்கருதி இரவு 6 மணியிலிருந்து அதிகாலை 6 மணிவரை சகல பஸ்சேவைகளும் மறு அறிவித்தல்வரை ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இரவு படக்காட்சியும் ரத்துச்செய்யப்பட்டுள்ளன.

## பிரசார

(1-ம் பக்சத் தொடர்ச்சி)

மாநில மாநாட்டுப்பிரசார குழுச்செயலாளரும் மன்னர் கூட்டணி மத்திய குழு உறுப்பினருமான ஜெயராஜ், மற்ருெரு இளைஞருடன் இரவு 10 மணிக்கு சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

பொலிஸாரைக் கண்டதும் சைக்கிளை செலுத்திச் சென்றவர் பாய்ந்து ஓடி விட்டாரென்றும் சைக்கில் பாரில் இருந்து சென்ற ஜெயராஜ் கைது செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

ஜெயராஜிடமிருந்த கூட்டணி மாநாடு சுவரொட்டிகளுக்கான மாதிரி வரைபடமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த மாதிரி வரைபடத்தை பெருந்தொகையாக யாழ்ப்பாணம் அச்சுக்கூடமொன்றில் அச்சடிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஜெயராஜ் தற்பொழுது முருங்கன், பொலிஸ் நிலையத்தில் விசாரணை செய்யப்பட்டு வருகிருர்.

ஏற்கனவே கல்முனையை சேர்ந்த பன்னீர்ச்செல்வம் என்பவர் கூட்டணி மாநாடு தொடர்பாக மன்னர் செல்லும் வழியில் சைதாகி குருநகர் இராணுவ முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது தெரிந்ததே.

## வடக்கில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறீர்கள் என்பது குறித்தோ சிந்திப்பதற்கு இனிநேரமில்லை பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவதுதான் எமது ஒரே நோக்கம்.

'தமிழர் விடுதலைக்கூட்டணியினருடன் பேச்சுவார்த்தை நடத்திஞேம், அவர்கள் பயங்கரவாதிகள் சார்பில் தான் பேசினுர்கள். இதற்கெல்லாம் விரைவில் முடிவு கட்டப்படும் நாமே முடிவு எடுத்து நாமே செயல்ப்படுத்துவோம். தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி.க்கள் தங்கள் உயிருக்குப் பயப்படுகிருர்கள்.

''இரண்டு, மூன்று வாரத்திற்குள் வட்டமேசை மாநாடு ஒன்றைக் கூட்டவிருக்கிறேன். மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு பல்வேறு அரசியல் கட்சிகளும் அழைக்கப்படவிருக்கின்றன. தமிழ் மக்களுக்கு 'தனி நாடு' கோரும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் வட்டமேசை மாநாட்டிற்கு அழைக்கப்படமாட்டார்கள். வட்டமேசை மாநாட்டிற்கு அழைக்கப்படும் மற்றும் கட்சியினர் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி எனதுயோசனைகளை வெளிப்படுத்தி, அதனை நான் செயல்படுத்துவேன்.

நிருடர்:- வடபகுதியில் இராணுவச் சட்டம் அமுல் செய்யப்படுமா?

ஜனுதிபதி:- அதனை நான் மறுக்கவில்லை.

நிருபர்:- தடுப்புக் காவலில் இருக்கும் கைதிகள் இம்சிக்சப்படுகிருர்கள் என்று கூறப்படுகிறதே!

ஜனுதிபதி:- அதனை நான் மறுக்கவில்லை. அது பற்றி எனக்குப் புகார் செய்தால் நடவடிக்கை மேற்கொள்ளுவேன்.

# முன்னுள் ஆஸி. தூதர் மனைவி கோரக்கொலை!

(கொழும்பு)

முன்னுள் இலங்கை ஆஸ்திரேலிய ஹைகமிஷனரின் பாரியார் திருமதி ரெறஸ்கெவின் (54வயது) நேற்று தமது ஆடம்பர இல்லத்தில் கோரமான முறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

இவர் கொலைசெய்யப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திருமதி கெவின் மாதந்தோறும் இருபதினுயிரம் ரூபா ஓய்வூதியம்பெற்று வருகின்ருர் என்றும், இவரது கணவர் சில வருடங்களுக்கு முன்னர் மரணமானுர் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பிரதிப் பொலிஸ்மா அதிடர் திரு. எட்வேட் குணவர்த்தன ஸ்தலத்துக்குச் சென்று பார்வையிட்டார். பம்பலப்பிட்டி பொலிஸார் விசாரணை மேற் கொண்டுவருகின்றனர்,

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு ஜுன் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu-P. O. Box: 49. Telegram: Eelanadu. Telephone: 22389—24126.